People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

ஏப்ரல் 15, 2010

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்
சென்னை 600 009

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 14 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 21.3.2010 முதல் 31.3.2010 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

## 21-3-2010 முதல் 31-3-2010 முடிய இவ்வாரத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | 2 |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | 3 |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 61 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 20 |
| 5. | வகுப்பறை வன்முறை | 3 |

| | | |
|---|---|---|
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 8 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 7 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | 2 |
| 9. | கொத்தடிமை | 1 |
| 10. | பெண் சிசு கொலை | 1 |
| 11. | குழந்தை திருமணம் | - |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 17 |
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | 2 |
| 14. | பட்டாசு ஆலை விபத்து | 2 |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | 1 |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | 2 |
| 17. | மணல் கொள்ளை | 5 |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | 1 |
| 19. | பொதுவானவை | 8 |
| | மொத்தம் | 146 |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். மேலும் கடந்த 4.4.2010 அன்று திண்டுக்கல் மாவட்டம் வடமதுரைக் காவல் நிலையைக் காவலர்களால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட செந்தில்குமார் சித்திரவதை செய்யப்பட்டு மரணமடைந்த சம்பவத்தையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

### *திண்டுக்கல் மாவட்டம், வடமதுரை காவல் நிலையக் காவலர்களால் காவல்நிலைய விசாரணைக்கு அழைத்துச்சென்ற செந்தில் குமார் சித்திரவதை - மரணம்*

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் தாலுகா வடமதுரை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மொட்டணம்பட்டியில் மாரியம்மன்கோவில் திருவிழா 4.4.2010 அன்று

நடந்துகொண்டிருந்தது.  அன்று இரவு 11.00 மணிக்கு வடமதுரைக் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திருமலை முத்துச்சாமி, தலைமைக் காவலர் ரவிச்சந்திரன், ஏட்டு பெருமாள், மற்றும் சீருடை அணியாத 3 காவலர்கள் 2 ஆட்டோவில் மொட்டணம்பட்டிக்குச் சென்று (38 வயது நிரம்பிய) மது போதையிலிருந்த செந்தில்குமாரை ஆட்டோவில் வலுக்கட்டாயமாக ஏற்றி விசாரணை என்ற பெயரில் காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

செந்தில்குமாரின் மனைவி சிவகாமி, செந்தில்குமாரின் அம்மா சரஸ்வதி மற்றும் இரண்டுபேருடன் காவல் துறையினரின் ஆட்டோவைப் பின்தொடர்ந்து இன்னொரு ஆட்டோவில் காவல் நிலைத்துக்குச் சென்றுள்ளனர்.  செந்தில்குமாரை ஆட்டோவில் வைத்து காவலர்கள் தங்களது ஷு அணிந்த கால்களால் மிதித்துச் சித்திரவதை செய்துள்ளனர். செந்தில்குமாரின் மனைவி சிவகாமி ஏன் இப்படி அடிக்கிறீர்கள் என்று கேட்டபோது ‘‘உன் கணவனைக் கடைசியாகப் பார்த்துக் கொள்’’ எனப் பதில் கூறியுள்ளனர்.  சித்தூர் சுடுகாடு அருகே ஆட்டோவை நிறுத்தி செந்தில் குமாரைக் கீழே இறக்கி லத்தியால் அடித்துச் சித்திரவதை செய்துள்ளனர்.  பின் அவரை வடமதுரைக் காவல் நிலையத்திற்குக் கொண்டு வந்துள்ளனர். அப்போது வேடசந்தூர் துணைக் கண்காணிப்பாளர் திரு மகேஸ்வரன் மேற்படி காவல் நிலையத்தில் இருந்துள்ளார்.  அவர் முன்னிலையிலும் செந்தில்குமாரை அடித்துச் சித்திரவதை செய்துள்ளனர்.  செந்தில்குமாரின் அலறல் சத்தம் கேட்டு அவரது மனைவி டி.எஸ்பியிடம் ஏன் அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு ‘‘அவனிடம் நிறைய விசாரிக்க வேண்டியுள்ளது, நீ உடனே வெளியே போ’’ என்று அவர்களைத் திட்டி வெளியே அனுப்பியுள்ளார். அதன் பின் மறுநாள் காலை 8.00 மணிக்குத்தான் செந்தில்குமார் மருத்துவமனையில் இருப்பதாகச் செய்தி வந்துள்ளது.  அவரது மனைவியும் உறவினர்களும் மருத்துவமனைக்குச் சென்று பிணவறையில் செந்தில்குமாரைப் பார்த்தபொழுது உடல் முழுவதும் இரத்தக் காயத்துடன் இருப்பதைப் பார்த்துள்ளனர். காவலர்கள் செந்தில்குமாரைக் கைது செய்து விசாரணக்கென்று கொண்டு  செல்லும்போது சட்டையேதும் அணியாமல் கைலியுடன் அழைத்தச் சென்றுள்ளனர்.  ஆனால் காயங்களை மறைப்பதற்காக காவல் துறையினரே ஒரு சட்டையை செந்தில்குமாருக்கு அணிவித்து அவரது சடலத்தைக் காண்பித்துள்ளனர்.

இந்நிலையில், காவல்துறையினரால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் சுரேஷ் குமார் என்பவரிடம் செந்தில் குமார் சைக்கிள் நிறுத்துவதற்கு மாமூல் கேட்டதாகவும் இரவு 1.00 மணிக்கு வடமதுரைக் காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளார் என்றும் அதன் பிறகு அவரை 3.30 மணிக்குப் பிடித்து 4.00 மணிக்கு வழக்குப் பதிவு செய்ததாகவும் கூறப்பட்டுள்ளது. பின்னர் 5.45 மணிக்கு வேடசந்தூர் நீதித்துறை நடுவர் முன் ஆஜர்படுத்தி ரிமாண்ட் ஆர்டர் வாங்கியதாகவும் கூறப்பட்டுள்ளது. இதன் பின் வேடசந்தூர் கிளைச் சிறைக்குக் கொண்டு செல்லும் வழியில் செந்தில்குமாருக்கு திடீரென்று நெஞ்சு வலி வந்ததாகவும் 6.10 மணியளவில் வேடசந்தூர் அரசு மருத்துவமனையில் அனுமதித்தாகவும், சிகிச்சை பலனின்றி செந்தில் குமார் இறந்தவிட்டதாகவும் திண்டுக்கல் DIG பத்திரிக்கையாளர் சந்திப்பில் கூறியுள்ளார்.

ஆனால் உண்மையிலேயே செந்தில்குமாரை 11.00 மணிக்குக் காவல் துறையினர் பிடித்துச் சென்றுள்ளதை மொட்டணம்பட்டியில் மாரியம்மன்கோவிலில் இருந்த அனைவரும் பார்த்துள்ளனர். காவல் துறையினர் அடித்துச் சித்திரவதை செய்ததை அவருடைய மனைவி. அவருடைய அம்மா மற்றும் அவர்களோடு சென்றவர்கள் பார்த்துள்ளனர். அதனால் காவல் துறையினர் சித்திரவதை செய்து செந்தில்குமாரைக் கொலை செய்துள்ளனர் என்பது எமது கள ஆய்வின் மூலம் தெரிய வருகிறது.

மேற்படி ஊரைச் சேர்ந்த ராமர் அவரது மனைவி ராஜம்மாள், 6வது வார்டு கவுன்சிலர் மற்றும் அவரது மகன் சுரேஷ்குமார் ஆகியோருக்கு சிமிண்ட் ரோடு போடுவது தொடர்பாகப் பிரச்சினை வந்தது. இதனால் கோபப்பட்டு ராமர் குடும்பத்தினர் இரும்புக் கம்பியால் செந்தில் குமாரைத் தாக்கியுள்ளனர். பாதிக்கப்பட்ட செந்தில்குமார் வடமதுரை காவல் நிலையத்தில் புகார் கொடுத்த போது வடமதுரைக் காவல் நிலைய ஆய்வாளர் திரு சீனிவாசன், செந்தில்குமார் மீதே வழக்குப் பதிவு செய்திருக்கிறார். இது தொடர்பாக மேற்படி காவல் ஆய்வாளர் மீது கடந்த 8.7.2009 அன்று திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பளரிடம் புகார் கொடுத்துள்ளார். இதைப் பார்க்கும் போது செந்தில் குமாருக்கும் வடமதுரைக் காவல் நிலையக் காவலர்களுக்கும் முன் விரோதம் இருந்தது தெரியவருகிறது.

எனவே, இச்சம்பவத்திற்குத் தொடர்புடைய, செந்தில்குமாரை அடித்துக் கொலை செய்த வேடசந்தூர் டி.எஸ்.பி. திரு மகேஸ்வரன், உதவி ஆய்வாளர் திருமலை முத்துச்சாமி, ஏட்டு பெருமாள், ஏட்டு ரவிச்சந்திரன், மற்றும் இதில் தொடர்புள்ள அனைவர் மீதும் கொலை வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி அவர்கள் மேல் சட்ட, மற்றும் துறை வாரியான நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம்.

செந்தில்குமார் மரணத்திற்குக் குற்றவியல் நடைமுறைச் சட்டம் Cr.P.C. 176(1)(a) ன் கீழ் வழக்குப் பதிவு செய்து நீதித்துறை நடுவர் விசாரணை மேற்கொள்ள வேண்டும். வேடசந்தூர் நீதித்துறை நடுவர் இவ்வழக்கில் சம்மந்தப்பட்டிருப்பதால் அவர் விசாரணை செய்யக் கூடாது. செந்தில்குமாரின் மனைவி சிவகாமிக்கு தமிழக அரசு உடனடியாக நிவாரணத் தொகை வழங்குவதோடு அரசு வேலையும் வழங்க வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

**(ஹென்றி டிபேன்)**
நிர்வாக இயக்குநர்

**நகல்கள்:**

தமிழகத் துணை முதல்வர்

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு-12
## 21.03.2010 முதல் 31.03.2010 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 898. | 20.3.2010 | **ஈரோடு மாவட்டம்:** சோழவரம் அருகே பூதூர், காரனேடை பகுதியில் அனுமதியின்றி மணல் அள்ளிய 3லாரிகள் மணலுடன் பறிமுதல். | மணல் கொள்ளை | பெருமாள் (12. 3.10) மாலைமலர் |
| 899. | 20.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** கண்ணமங்கலத்தைச் சேர்ந்த ராஜன் மகள் மாலா(17). பி.எஸ்.சி. முதலாமாண்டு படித்து வருகிறார். கல்லூரிக்கு சென்ற மாலாவை காணவில்லை என பெற்றோர் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (25.3.10) தினகரன் |
| 900. | 20.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** கலசப்பாக்கம் அடுத்த சோழவரம் கிராமத்தைச் சேர்ந்த இளையராஜா மனைவி சரிதா(26). கணவன்–மனைவி குடும்ப தகராறில் மனமுடைந்த சரிதா அரளி விதையைச் சாப்பிட்டு தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (26. 2.10) தினகரன் |
| 901. | 20.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** கலசப்பாக்கம் அடுத்த எள்ளுப்பாறை கிராமத்தைச் சேர்ந்த ராஜா மகன் ஆனந்த்24) மனைவி செண்பகம். மாமனார் செல்வத்தின் வீட்டிற்கு வரும் ஆனந்த் தாய் வீட்டிற்கு வருவதில்லை மனமுடைந்த ஜெயா ஆத்திரமடைந்து செல்வத்திடம் நியாயம் கேட்டார். இருவருக்கும் நடந்த தகராறில் ஜெயாவை செல்வம் மற்றும் குடும்பத்தார் தாக்கியதாக ஜெயா புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (28.2.10) தினகரன் |
| 902. | 20.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** ஆரணி வடியராஜா தெருவைச் சேர்ந்த விஜயகுமார் மனைவி இந்துமதி(25). வீட்டிற்கு தெரியாமல் தாலி கட்டி திருமணம் செய்து வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் பெற்றோர் சொல் கேட்டு தன்னுடன் குடும்பம் நடத்த விஜயகுமார் மறுப்பதாக இந்தமதி புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (28.3.10) தினகரன் |
| 903. | 20.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** போளூர் அருகே அனுமதியின்றி மணல் கடத்திய 16 வண்டிகள் பறிமுதல். வண்டிகளை பறிமுதல். | மணல் கடத்தல் | பாஸ்கர் (2.3.10) தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| 904. | 20.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** களம்பூர் அடுத்த ராயங்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த விஜயகுமார் மனைவி கவிதா(22). விஜயகுமார் மனைவி மற்றும் குழந்தைகளை காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (3.3.10) தினகரன் |
| 905. | 20.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** திருவண்ணாமலை அடுத்த மங்கலம் அருகே உள்ள வள்ளுவாம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த இளம் பெண். அதே பகுதியைச் சேர்ந்த சரவணன் இருவரும் காதலித்து வந்தனர். திருமணம் செய்து கௌாள்வதாக ஆசை வார்த்தை கூறி இளம் பெண்ணை சரவணன் கடத்தல். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | பாஸ்கர் (4.3.10) தினகரன் |
| 906. | 20.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** செங்கம் அடுத்த பிஞ்சூர் கிராமத்தில் வசிப்பவர் பலராமன்(50) அண்ணன் எல்லப்பன்(55). பலராமன் மகள் குணசுந்தரி(20) இருவருக்கும் குடும்ப தகராறு இருந்த நிலையில் நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த குணசுந்தரியை பெரியப்பா எல்லப்பன் மற்றும் அவரது மகன் மாணிக்கம் குணசுந்தரியை ஆபாசமாக பேசி தாக்கியதாக குணசுந்தரி புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (9.3.10) தினகரன் |
| 907. | 20.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** ஆரணி அடுத்த சந்தவாசல் அருகே உள்ள ராமநாதபுரம் கிராமத்தைச் சேர்ந்த ரமேஷ் மனைவி உமா(22). உமாவின் நடத்தையில் சந்தேகப்பட்டு கணவன் துன்புறுத்தியதால் மனமுடைந்த உமா தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (10.3.10) தினகரன் |
| 908. | 20.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** ஆரணி ஆடுத்த சேவூர் ஸ்ரீராம் நகரைச் சேர்ந்த சீதாராமன் மகன் கண்ணன்(12). சரிவர பள்ளிக்கு செல்லாததால் பெற்றோர் கண்டித்ததால் மனமுடைந்த கண்ணன் தீக்குளித்து தற்கொலை. | குழந்தைகள் மீதான வன்முறை | பாஸ்கர் (11.3.10) தினகரன் |
| 909. | 20.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** திருவண்ணாமலை அருகே பென்னாத்தூர் அரியாங்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த செந்தில்குமார் மனைவி புவனேஸ்வரி(24). கூடுதல் வரதட்சணைக் கேட்டு கணவர் மற்றும் குடும்பத்தார் துன்புறுத்தியதால் | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (11. 3.10) தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | புவனேஸ்வரி தற்கொலை. | | |
| 910. | 20.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** கலசாப்பாக்கம் அடுத்த அருணகிரி மங்கலம் கிராமத்தைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி(28) மகள் புவனேஸ்வரி(3) தம்பி மகள் சவுந்தர்யா(4), அதே பகுதியைச் சேர்ந்த ராஜவேல்(63) சிறுமிகளை மிரட்டி மனித மலத்தை அள்ள சொன்னதாக கிருஷ்ணமூர்த்தி புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | பாஸ்கர் (11. 3.10) தினகரன் |
| 911. | 20.3.2010 | **ஈரோடு மாவட்டம்:** ஈரோடு சூரம்பட்டி சாஸ்திரி வீதியைச் சேர்ந்த தசரதன் மனைவி உமா(30). மகன் தரணி(3). கணவன் மனைவி இருவரும் கருத்து வேறுபாடு காரணமாகப் பிரிந்து வாழ்ந்தனர். இந்நிலையில் உமா கார்த்தி என்பவரை திருமணம் செய்த கொண்டார். கார்த்தி சிறுவன் தரணியை பெல்ட்டால் அடித்துத் துன்புறுத்தியதாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | பெருமாள் (12. 3.10) மாலைமலர் |
| 912. | 20.3.2010 | **ஈரோடு மாவட்டம்:** பெருந்துறையில் உள்ள ஒரு தனியார் ஆசிரியர் பயிற்சி பள்ளியில் படித்து வரும் மாணவி தேன்மொழி(18). அதே பள்ளியில் 2ஆம் ஆண்டு படித்த வந்த மாணவர் வினோத் குமார் ஆகிய மாணவர்கள் சுற்றுலா சென்ற இடத்தில் மாணவி தேன்மொழியை பாலியல் செய்தோடு. காட்டில் கட்டிப்போட்டு விட்டு தப்பிஓட்டம். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | பெருமாள் (12. 3.10) மாலைமலர் |
| 913. | 20.3.2010 | **ஈரோடு மாவட்டம்:** சென்னிமலை அருகே உள்ள காமராஜர் நகர் உப்பிலிபாளையத்தைச் சேர்ந்த கணேசன் மனைவி பூர்ணிமா(20). அரிகரசுதன்(11/2) என்ற குழந்தை.கருத்து வேறுபாடு காரணமாக இருவரும் பிரிந்து வாழ்ந்தனர். பிரபுக்கும் பூர்ணிமாவுக்கும் தொடர்பு. இந்நிலையில் தனது உல்லாசத்துக்கு குழந்தை தடையாக இருப்பதாகக் கருதிய பிரபு குழந்தையைக் கொன்று வீசியதாக பிரபு கைது. | குழந்தைகள் மீதான வன்முறை | பெருமாள் (12.3.10) மாலைமலர் |
| 914. | 20.3.2010 | **ஈரோடு மாவட்டம்:** அம்மாபேட்டை அருகே நெரிஞ்சிபேட்டையைச் சேர்ந்த ராஜேந்திரன் மனைவி ஈஸ்வரி(35)யை. அதே பகுதியைச் சேர்ந்த சரவணன்(25) பாலியல் பலாத்கார முயற்சி. சரவணன் கைது. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | பெருமாள் (13.3.10) காலைமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 915. | 20.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** திருவண்ணாமலை அடுத்த வேங்கிக்கால் கிராமத்தைச் சேர்ந்த 17 வயது பிளஸ் 1 மாணவியை. அதே பகுதியைச் சேர்ந்த ஆட்டோ டிரைவர் காளிதாசன் திருமணம் ஆசை வார்த்தை கூறி கடத்திச் சென்றதாக பெற்றோர் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | பாஸ்கர் (15. 3.10) தினகரன் |
| 916. | 20.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** திருவண்ணாமலை அடுத்த நூக்காம்பாடி மாரியம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த வாசுகி(30). பஸ்சில் பயணம் சென்றபோது அருகில் அமர்ந்து பயணம் செய்த பெண், பிறந்த இரண்டு நாள் மட்டுமே ஆன குழந்தையை வாசுகியிடம் ஒப்படைத்து விட்டு மாயம். | குழந்தைகள் மீதான வன்முறை | பாஸ்கர் (15.3.10) தினகரன் |
| 917. | 20.3.2010 | **ஈரோடு மாவட்டம்:** ஈரோடு அருகே சூரியம்பாளையம் பஞ்சாயத்து பகுதியில் உள்ள வீரபண்ணாடிபுதூர் குப்புசாமி நாயுடுவின் மனைவி லட்சுமி(90) இறந்துவிட்டார் வீரபண்ணாடியூரில் அடக்கம் செய்ய கொண்டு வந்தபோது இரு தரப்பினரிடையே மோதல். | மயான ஆக்கிரமிப்பு & கோஷ்டி மோதல் | பெருமாள் (15.3.10) மாலைமலர் |
| 918. | 20.3.2010 | **கோவை மாவட்டம்:** கோவை புது சித்தாப்புதூரைச் சேர்ந்த கமலவினோதினி(38). திருப்பூரில் ஏட்டாக பணிபுரியும் ரத்தினசாமி இருவரும் காதலித்தாகவும் ரத்தினசாமி திருமணத்திற்கு மறுத்ததால் மனமுடைந்த கமலவினோதினி சாணிப்பவுடர் குடித்து தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & காவல் நிலைய வன்முறை & தற்கொலை | பெருமாள் (16.3.10) மாலைமலர் |
| 919. | 20.3.2010 | **ஈரோடு மாவட்டம்:** கோபி நல்லகவுண்டன்பாளையத்தைச் சேர்ந்த அர்ஜூனன் மனைவி தங்கமணி(37). அதே பகுதியைச் சேர்ந்த ராஜா இருவருக்கும் எற்பட்ட தகராறில் ஆத்திரமடைந்த ராஜா மற்றும் உறவினர் 5 பேர் சேர்ந்து தங்கமணியைத் தாக்கியுள்ளனர். தங்கமணி புகார். | பெண்கள் மீதான வன்முறை | பெருமாள் (17.3.10) மாலைமலர் |
| 920. | 20.3.2010 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி அருகே உள்ள நாராணபுத்தூர் கருப்புசாமி மனைவி வளர்மதி (22). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதாக வளர்மதி விருதுநகர் அனைத்து மகளிர் | பெண்கள் மீதான வன்முறை | முனிராஜ் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காவல் நிலையத்தில் புகார். | | |
| 921. | 20.3.2010 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா சுந்தரபாண்டியம் கீழத் தெரு மாற்றுத் திறனாளர் சுந்தரி. சுந்தரியை சேகர் பாலியல் வன்கொடுமை. சுந்தரி கிருஷ்ணன்கோவில் காவல் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | முனிராஜ் |
| 922. | 20.3.2010 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி நகரைச் சேர்ந்த வெள்ளைப்பாண்டி. வெள்ளைப்பாண்டியை சிவகாசி நகர காவலர்கள் உதவி ஆய்வாளர் சந்தோஷ்குமார் தலைமையில் விசாரணைக்கு அழைத்துச் சென்று அடித்துச் சித்திரவதை செய்ததில் சந்தோஷ்குமார் மரணம். | காவல் நிலைய மரணம் | முனிராஜ் |
| 923. | 21.3.2010 | **நெல்லை மாவட்டம்:** தூத்துக்குடி ஆயுதப்படை போலீஸ் பிரிவில் போலீசாக பணியாற்றி வரும் சேகர். அவரது கூட்டாளி அய்யப்பன்(30). ராபர்ட் ஆகியோர் கள்ளநோட்டு அச்சிட்டுள்ளனர். | காவல் நிலைய வன்முறை | தினத்தந்தி |
| 924. | 21.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை சீனிவாசப் பெருமாள் கோயில் பகுதியைச் சேர்ந்த முத்துசாமி மனைவி மலர். கணவன் மற்றும் குடும்பத்தார் கூடுதல் பணம் கேட்டு துன்புறுத்தியதால் மனமுடைந்த மலர் தீக்குளித்து தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை<br>&<br>தற்கொலை | தினமணி |
| 925. | 21.3.2010 | **திருவண்ணாமலை மாவட்டம்:** போளூர் வட்டத்தில் உள்ளது படவேடு கிராமம். இந்த கிராமத்தில் உள்ள ரேணுகாம்பாள் கோயில் அருகே 300 தலித்து சமூகத்தைச் சேர்ந்த குடும்பங்கள் வீடுகட்டி வசித்து வருகின்றனர். இந்த வீடுகள் கோயிலுக்கு சொந்தமானது என கூறி அதிகாரிகள் வீடுகளை பூட்டி சீல் வைத்தனர். பொது மக்கள் போராட்டத்தின் போது 300 பேர் மீது பல பொய் வழக்குகளை காவல்துறை பதிவு செய்ததாக மக்கள் புகார். | தலித்துகள் மீதான வன்முறை<br>&<br>காவல் நிலைய வன்முறை | தீக்கதிர் |
| 926. | 21.3.2010 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** தேன் கனிக்கோட்டை வட்டம் கல்கேரி கிராமத்தில் கிரகம்மாள் மற்றும் ஆஞ்சநேயர் கோவில்கள் உள்ள தலித் மக்கள் அழைத்துச் செல்லப்பட்டதால் | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கிரகம்மாள் கோயில் தீட்டுபட்டுவிட்டதாக கூறி ஆதிக்க சாதியை சேர்ந்த சிலர் சாமி சிலையை திருவிட்டதாகவும். தலித் மக்கள் பயன்படுத்திய பாதைகளை அடைத்துவிட்டதாகவும் அதனால் விவசாயம் செய்ய முடியாமல் மக்கள் சிரமப்படுவதாக புகார். | | |
| 927. | 21.3.2010 | **மதுரை மாவட்டம்:** சிலைமான் அருகேயுள்ள பாப்பிரெட்டிபட்டியைச் சேர்ந்த விநாயகமூர்த்தி(27) மனைவி காயத்திரி (23). கணவன் மனைவி குடும்பத் தகராறில் காயத்திரி தனது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டார். அவரை அழைக்க சென்ற விநாயகமூர்த்தி அவர் வர மறுத்ததால் விநாயகமூர்த்தி மனைவிக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக காயத்திரி தந்தை புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 928. | 21.3.2010 | **தேனி மாவட்டம்:** உத்தமபாளையம் அருகே உள்ள கருக்கோடையை சேர்ந்த ரவிச்சந்திரன் மகள் சுகன்யா(17). அதே பகுதியைச் சேர்ந்த ராணுவவீரர் கோபி (35) மற்றும் அவரது தந்தை சித்தப்பா ஆகியோர் சுகன்யாவை கடத்தியதாக ரவிச்சந்திரன் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினகரன் |
| 929. | 21.3.2010 | **தேனி மாவட்டம்:** தேவாரம் அருகே உள்ள பொம்மிநாயக்கன்பட்டியைச் சேர்ந்த இன்னாசி மகள் கலையரசி(9). சிந்தலைச் சேரியைச் சேர்ந்த ஆரோக்கியம்(35). சிறுமியை கடத்த முயன்றதாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 930. | 21.3.2010 | **கன்னியாகுமரி மாவட்டம்:** நாகர்கோவில் அருகே ராமன்புதூர் பகுதியைச் சேர்ந்த சித்ரா(28). அதே பகுதியைச் சேர்ந்த விஜின்(30). இருவரும் காதலித்தனர். விஜின் திருமணம் செய்து கொள்வதாக ஏமாற்றி கற்பழித்து குழந்தை பிறந்தவுடன் திருமணத்திற்கு மறுப்பதாக கைக்குழந்தையுடன் சித்ரா காதலன் வீட்டு முன்பு போராட்டம். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தமிழ்முரசு |
| 931. | 213.2010 | **கடலூர் மாவட்டம்:** திட்டக்குடி அடுத்த கொடிகளம் கிராமத்தைச் சேர்ந்த ராஜா(28) மகன் சந்தோஷ்(1). சிறுநீர் கழிப்பதில் பிரச்சனை ஏற்பட்டு சிறுவனை பெரம்பலூர் தனியார் மருத்துவனையில் சேர்த்து அறுவை சிகிச்சை செய்த சில | குழந்தைகள் மீதான வன்முறை & மருத்துவர்களின் அலட்சியம் | தமிழ்முரசு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மணி நேரங்களில் சிறுவன் இறந்துவிட்டதால் டாக்டரின் தவறான சிகிச்சையால் சிறுவன் இறந்ததாக பெற்றோர் புகார். | | |
| 932. | 21.3.2010 | **கோவை மாவட்டம்:** சிங்காநல்லூர் இந்திரா நகர் 2வது வீதியைச் சேர்ந்த ரேணுகாதேவி (40) இவரை டாக்டர் தரணிகுமார் திருமணம் செய்து கொள்வதாக ஆசைவார்த்தை கூறி ஏமாற்றியதால் மனமுடைந்த ரேணுகாதேவி தனது மகள் சுரேகாவுக்கு விஷ ஊசி போட்டு கொன்றுவிட்டு தானும் தற்கொலை செய்து கொண்டார். | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தமிழ்முரசு |
| 933. | 21.3.2010 | **சிவகங்கை மாவட்டம்:** காரைக்குடி வீரபத்ரபிள்ளை தெரு இடையர் தெருவைச் சேர்ந்த ஞானசம்பந்தம் மகள் சண்முகப்பிரியா(25). இவருக்கு பெற்றோர் திருமணத்திற்கு மாப்பிள்ளை பார்த்தனர். பெற்றோர் பார்த்த மாப்பிள்ளை பிடிக்காததால் மனமுடைந்த சண்முகப்பிரியா தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | மாலை முரசு |
| 934. | 21.3.2010 | **திண்டுக்கல் மாவட்டம்:** வத்தலக்குண்டு அருகே குரும்பட்டியைச் சேர்ந்த புஷ்பம்(45). இலவச டி.வி. வழங்க டோக்கன் கொடுத்து கொண்டிருந்த போது அதே பகுதியைச் சேர்ந்த சந்தோஷ், ஆண்டி, பெரியகருப்பன், அன்புசெல்வன் ஆகியோர் இரும்பு கம்பியால் புஷ்பத்தை தாக்கி கையை உடைத்ததாக புஷ்பம் புகார். | பெண்கள் மீதான வன்முறை | மாலைமுரசு |
| 935. | 21.3.2010 | **திண்டுக்கல் மாவட்டம்:** வத்தலக்குண்டு அருகே உள்ள சித்தூர் பால்வாடி தெருவைச் சேர்ந்த மூர்த்தி மகள் லட்சுமி(13). 7ம் வகுப்பு படித்து வந்த லட்சுமிக்கு பள்ளி கட்டணம் கட்ட தாய் பணம் தராததால் லட்சுமி தீக்குளித்துத் தற்கொலை. | குழந்தைகள் மீதான வன்முறை & தற்கொலை | மாலை முரசு |
| 936. | 21.3.2010 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** செங்கல்பட்டு மற்றும் மதுராந்தகம் பகுதிகளில் உள்ள கூட்டுறவு ரேசன் கடைகளில் கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் செந்தில்குமார் சோதனை நடத்திய போது திருநாகலூர் ரேசன் கடையில் 4899 ருபாய் முறைகேடு | லஞ்சம் | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடந்திருப்பதாக கடை விற்பனையாளர் கோவிந்தன் சஸ்பெண்ட். | | |
| 937. | 21.3.2010 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** மதுராந்தகம் அருகே பாலாற்றில் மணல் குவரி உள்ளது. சென்னை உள்ளிட்ட பல இடங்களில் இருந்து மணல் அள்ளி செல்லும் லாரிகள் அதிவேகமாக செல்வதால் பள்ளி செல்லும் நேரங்களில் குழந்தைகள் பாதிப்பு. | மணல் கொள்ளை மற்றும் குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 938. | 22.3.2010 | **சென்னை மாவட்டம்:** திருமங்கலம் பாடகுப்பம் சாலை காந்தி நகரைச் சேர்ந்த தங்கபாண்டியன் (43) மனைவி சாந்தி (35) மகள் ஜனனி(6). கணவன் மனைவி குழந்தை மூவரும் தீக்குளித்துத் தற்கொலை. இது குறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர். | வறுமை & தற்கொலை | தினகரன் |
| 939. | 22.3.2010 | **சென்னை மாவட்டம்:** பழைய பெருங்களத்தூர் திருவள்ளுவர் தெருவைச் சேர்ந்த வினோத் குமார்(27) மனைவி ஷீலா பத்மினி(23). குடும்பத் தகராறு காரணமாக வினோத்குமார் ஷீலா பத்மினியை கழுத்தை நெறித்துக் கொலை செய்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினகரன் |
| 940. | 22.3.2010 | **திருவள்ளூர் மாவட்டம்:** ஊத்துக்கோட்டை அருகேயுள்ள பேரண்டுரை சேர்ந்த மாரிமுத்து மனைவி ஜோதி(28). தனது மாமனார் காட்டனுக்கு சாப்பாடு கொடுக்கவில்லை என அவரது தங்கைகள் கன்னியம்மா, பாலையம்மா ஆகியோர் திட்டியதால் மனமுடைந்த ஜோதி தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 941. | 22.3.2010 | **திருவள்ளூர் மாவட்டம்:** சோழவரம் அருகே பூதூர், காரனோடை பகுதியில் அனுமதியின்றி மணல் அள்ளிய 3லாரிகள் மணலுடன் பறிமுதல். | மணல் கடத்தல் | தினகரன் |
| 942. | 22.3.2010 | **திருவள்ளூர் மாவட்டம்:** ஆவடி பட்டாபிராம் வெங்கடாபுரத்தைச் சேர்ந்த மாரி மகள் ரஞ்சனி(23). வேலைக்கு சென்ற ரஞ்சனியை காணவில்லை என பெற்றோர் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 943. | 22.3.2010 | **ஈரோடு மாவட்டம்:** கோபியைச் சேர்ந்த ராமச்சந்திரன்(68) இவர் ரேசன் கடைகளில் குறைந்த விலைக்கு ரேசன் அரிசி வாங்கி அதிகவிலைக்கு வெளியில் விற்பதாக தகவல். அவரது வீட்டை | ரேசன் அரிசி கடத்தல் | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சோதனையிட்டதில் 35 கிலோ எடையுள்ள 10 மூடைகளில் 345 கிலோ அரிசி பறிமுதல். | | |
| 944. | 22.3.2010 | **சேலம் மாவட்டம்:** சேலத்தைச் சேர்ந்த கந்தசாமி மனைவி விஜயா. கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த கந்தசாமி மனைவி மற்றும் மகன் முருகனை கத்தியால் கையை வெட்டியதாக விஜயா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 945. | 22.3.2010 | **சேலம் மாவட்டம்:** ஏற்காடு முளுவியைச் சேர்ந்த சங்கர் மனைவி தனலெட்சுமி. அதே பகுதியைச் சேர்ந்த ராமர் மனைவி பழனியம்மாள். தண்ணீர் பிடிப்பதில் இருவருக்கும் இடையே ஏற்பட்ட தகராறில் ஆத்திரமடைந்த ராமர் தனலெட்சுமியை கடப்பாறையால் மண்டையை உடைத்ததாக சங்கர் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 946. | 22.3.2010 | **சேலம் மாவட்டம்:** ஓமலூர் அருகேயுள்ள சரபங்கா நதி பாலத்தின் அடியில் பிறந்த ஒரு வாரமே ஆன பெண் சிசுவின் சடலம் பறிமுதல். | பெண்சிசுக் கொலை | தினகரன் |
| 947. | 22.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை திருநகர் அருகே தென்பழஞ்சியைச் சேர்ந்த கொத்தனார் படித்துரை(35) மனைவி மகாலட்சுமி (27). படித்துரை அமுதா என்ற பெண்ணை இரண்டாவதாக திருமணம் செய்து முதல் மனைவியுடன் குடிவைத்தார். ஆத்திமடைந்த மகாலட்சுமி அமுதா மீது மண்ணெண்ணெய் ஊற்றி கொளுத்தியதாக கைது. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினமலர் |
| 948. | 22.3.2010 | **மதுரை மாவட்டம்:** ஒத்தக்கடையைச் சேர்ந்த சிவக்குமார் மனைவி சந்தானதேவி (30). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணை கேட்டுத் துன்புறுத்தியதாக சந்தானதேவி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 949. | 22.3.2010 | **திருச்சி மாவட்டம்:** பாலக்கரை கீழபடையாச்சி தெருவைச் சேர்ந்த யோகராஜ்(24) மனைவி ஜெசிராணி(23). மகன் கோகுல்சாரதி(11/2) கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த ஜெசிராணி தனது குழந்தையுடன் தீக்குளித்து தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினத்தந்தி |
| 950. | 22.3.2010 | **திருவள்ளூர் மாவட்டம்:** கடம்பத்துர் | குழந்தைகள் | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அருகே உள்ள கோவிலாம்பூண்டி கிராமத்தைச் சேர்ந்த பாபு மனைவி கிரிஜா(38). இவர்களுக்கு குழந்தைகள் இல்லை. பாபுவின் தம்பி ஜெயராமன் மனைவி ரேகா(32). இவர்கள் மகன் குணசேகரன். இந்த நிலையில் பாபு கிரிஜா தம்பதியினர் பிறந்த ஆண் குழந்தையை பூச்சி மருந்து கொடுத்து கொல்ல முயன்றதாக ரேகா கைது. | மீதான வன்முறை & கொலை முயற்சி | |
| 951. | 22.3.2010 | **சென்னை மாவட்டம்:** சென்னை ஓட்டேரியைச் சேர்ந்த டெல்லிபாபு மகள் கீர்த்தி தேவதர்சினி(3). காலாவதியான மாத்திரையை சாப்பிட்டதால் கீர்த்தி தேவதர்சினி இறந்ததாக போலீசில் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என பெற்றோர் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை & காவல் நிலைய வன்முறை | தினத்தந்தி |
| 952. | 22.3.2010 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** ஒசூர் அருகே சென்னத்தூரில் அரசு நடுநிலைப்பள்ளி ஆசிரியர் சந்திரசேகர்(29), மஞ்சுநாத்(30). அதே பகுதியைச் சேர்ந்த சுதாகர்ரெட்டி(27) போதையில் பள்ளிக்குள் நுழைந்து பணியில் இருந்த இரு ஆசிரியர்களைத் தாக்கியதாக சுதாகர்ரெட்டி கைது. | குடி போ8தையில் பள்ளி ஆசிரியர் | தினகரன் |
| 953. | 22.3.2010 | **விருதுநகர் மாவட்டம்:** மக்கள் கண்கணரிப்பகத்தின் விருதுநகர் மண்டல மனித உரிமை ஒருங்கிணைப்பாளர் க.முனியராஜ். 22.3.2010 தேதியன்று சிவகாசி நகர காவல் நிலைய சார்பு ஆய்வாளர் சந்தோஸ் குமாரைச் சந்தித்து வெள்ளைப்பாண்டி காவல் நிலைய மரண வழக்கு சம்பந்தமாக முனியராஜ் விசாரித்துள்ளார். சார்பு ஆய்வாளர் சந்தோஸ்குமார் முனியராஜை மிகக்கேவலமாகத் திட்டியதோடு மக்கள் கண்காணிப்பகத்தையும் அதன் நிர்வாக இயக்குனர் ஹென்றி டிபேனயைும் தரக்குறைவாகப் பேசி அவமதிப்பு. | காவல் நிலையச் சித்திரவதை | க.முனியராஜ் |
| 954. | 22.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரையில் சமீபத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தீண்டாமை ஒழிப்பு சார்பில் தலித் மக்களின் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பேரணி நடத்தியது. அதில் மதுரையில் இடிந்து விழும் நிலையில் உள்ள குடியிருப்புகளில் ஆபத்தான | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிலையில் வசித்துவரும் தலித் மக்களின் வீடுகளை புனரமைத்துத் தர வேண்டுமென கோரிக்கை. | | |
| 955. | 22.3.2010 | **புதுக்கோட்டை மாவட்டம்:** ராஜகோபாலபுரம் வீதியில் வசிப்பவர் ராமையா மகள் மேனகா(22). அதே பகுதியைச் சேர்ந்த புஷ்பராசுக்கும் திருமணம் நடந்தது. 7 மாத கர்ப்பிணியான மேனகா இயற்கை உபாதை கழிக்க சென்ற இடத்தில் ஒரு கும்பலால் பாலியல் வன்முறைக்கு ஆளாகி தன் சுய நினைவை இழந்து மயக்க நிலையில் இருக்கிறார். இது குறித்து புகார் கொடுத்தும் காவல்துறை நடவடிக்கை எடுக்காமல் மெத்தனமாக செயல்படுவதாக புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை &<br>காவல் நிலைய சித்திரவதை | தீக்கதிர் |
| 956. | 23.3.2010 | **கரூர் மாவட்டம்:** வேலாயுதம்பாளையத்தில் வசித்து வரும் சக்திவேல் மனைவி லட்சுமி. லட்சுமியை 3 நபர்கள் இணைந்து பாலியல் கொடுமை. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | பிரபாகரன் |
| 957. | 23.3.2010 | **நெல்லை மாவட்டம்:** சிவகிரி அருகே உள்ள விசுவநாதபேரி கிராமத்தைச் சேர்ந்த ராமராஜ்(35) விபூதி போட்டு குறி சொல்லி வருகிறார். வால்பாறை பகுதியைச் சேர்ந்த சண்முகராஜ் மனைவி சந்தனதேவி(30). குறி கேட்க வந்த சந்தனதேவிக்கும் ராமராஜ்க்கும் பழக்கம் எற்பட்டது. சண்முகராஜ் மனைவியை காணவில்லை என புகார். சாமியார் வீட்டில் இருந்த சந்தனதேவி மீட்கப்பட்டார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 958. | 23.3.2010 | **கடலூர் மாவட்டம்:** விருத்தாசலம் அருகே உள்ள அரசக்குழியைச் சேர்ந்த கிளமன்ட் எஸ்கிலின்ராஜ்(25). அதே பகுதியைச் சேர்ந்த வனிதா(19). கிளமன்ட் எஸ்லின்ராஜ் வனிதாவை ஒரு தலையாக காதலித்தார். வனிதா காதலிக்க மறுத்ததால் ஆத்திரமடைந்த கிளமன்ட் வனிதாவை ஆபாச புகைப்படங்கள் எடுத்து அந்த புகைப்படங்களை இன்டர்நெட்டில் வெளியிடுவதாக மிரட்டியதாக வனிதா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 959. | 23.3.2010 | **இராமநாதபுரம் மாவட்டம்:** தேவகோட்டை ஆனந்தூர் பகுதியைச் | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சேர்ந்த தங்கபாண்டியன் (32) மனைவி சாந்தி(26) மகள் ஜனனி(6). கணவன் மனைவி குடும்ப தகராறில் சாந்தி தீக்குளித்தார் குழந்தை அவரிடம் ஒடியது அவர்களை காப்பாற்ற போன தங்கபாண்டியன் மூவரும் தீயில் கருகி உயிரிழந்தனர். | & தற்கொலை | |
| 960. | 23.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை திருநகர் அருகே வேடர்புளியங்குளம் கீழத் தெருவைச் சேர்ந்த வெள்ளைச்சாமி மகள் ராக்குபிள்ளை (19). பெற்றோர் திட்டியதால் மனமுடைந்த ராக்குபிள்ளை விஷம் குடித்த தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தமிழ்சுடர் |
| 961. | 23.3.2010 | **இராமநாதபுரம் மாவட்டம்:** பரமக்குடி அருகே உள்ள பாம்பூர் கிராமத்தைச் சேர்ந்த சொக்கலிங்கம் மகள் மங்கேஸ்வரி(21). ஆசிரியர் பயிற்சி பள்ளியில் ஆசிரியர் படிப்பு படித்து வந்த மகேஸ்வரியைக் காணவில்லை என அண்ணன் சண்முகவேல் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 962. | 23.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் சாமிகளுக்கு மாலை கட்டி கொடுப்பதற்கு பாலசுப்பிரமணியன் காண்டிராக்டர் எடுத்தார். நிர்வாகம் கொடுக்கும் பணத்திற்கு அவர் மாலைகள் கட்டி கொடுக்க ஒப்புதல் அளித்தார். கோவில் நிர்வாகம் ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் பாக்கி தர வேண்டிய பணத்திற்கு பில்லினை அனுமதித்து தரும்படி நேர்முக உதவியாளர் அய்யம்பெருமாளை அணுகினார். அவர் 3ஆயிரம் லஞ்சம் கேட்டதாக பாலசுப்பிரமணியம் புகார். | லஞ்சம் | தமிழ்முரசு |
| 963. | 23.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை 29 வார்டு அம்பேத்கார் நகரில் வசிக்கும் ஆதிதிராவிட மக்கள் பயன்படுத்தி வந்த பாதையை சிலர் காவல்துறை துணையுடன் அடைத்துவிட்டனர். என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட கட்சியின் கிழக்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்.நன்மாறன் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 964. | 23.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை டி.ஆர்.ஓ.காலனியில் சரஸ்வதி காலனியில் வசித்து வந்தார். பார்த்தசாரதி மனைவி சீதாலட்சுமி(47). வீட்டின் உரிமையாளர் சரஸ்வதிக்கும் சீதாலட்சுமிக்கும் இடையே | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஏற்பட்ட தகராறில் சரஸ்வதி மற்றும் அவரது கணவர் மகன்கள் ஆகியோர் சீதாலட்சுமியைத் தாக்கியதாக சீதாலட்சுமி புகார். | | |
| 965. | 23.3.2010 | **சேலம் மாவட்டம்:** ஓடைக்காட்டுபுதூரில் உண்டு உறைவிட தொடக்கப்பள்ளி உள்ளது. விடுதியில் சமையலர் சின்னகுட்டி. 100 கிலோ அரிசி மூட்டையை அதே பகுதியைச் சேர்ந்த ஒரு நபரிடம் விற்க முயன்றார். பள்ளி மாணவர்கள் பார்த்து தடுத்து நிறுத்தியதாக புகார். | விடுதியில் முறைகேடு | தினகரன் |
| 966. | 23.3.2010 | **நெல்லை மாவட்டம்:** கடையநல்லூர் கிருஷ்ணபுரத்தைச் சேர்ந்த செல்லச்சாமி துப்புரவுத் தொழிலாளியான இவர் கூட்டுறவு சங்கத்தில் ரூ.40 ஆயிரம் கடன் வாங்கினார். ரூ12 ஆயிரம் வட்டி கட்டியதாகவும் தன்னிடம் ரூ.12 ஆயிரத்தை வாங்கியவர் வங்கியில் வரவு வைக்காமல் மோசடி. | தலித்துகள் மீதான வன்முறை & ஊழல் | தினகரன் |
| 967. | 23.3.2010 | **திண்டுக்கல் மாவட்டம்:** கீரனூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் சுந்தரராஜன். ஸ்டேஷனில் ஏட்டாக பணிபுரியும் சுப்பிரமணி குடிபோதையில் பணிக்கு வந்ததால் இருவருக்கும் தகராறு. இன்ஸ்பெக்டருக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக சுப்பிரமணி கைது. | காவல் நிலைய வன்முறை & காவலர் போதைக்கு அடிமை | தினமலர் |
| 968. | 24.3.2010 | **மதுரை மாவட்டம்:** முன்னாள் அமைச்சர் ஆலடி அருணா கொலை வழக்கு கைதி அழகர். பாளையங்கோட்டை சிறையில் இருக்கும் அவர் தனக்கு இங்கு பாதுகப்பு இல்லை என்றும். தன்னை மதுரை சிறைக்கு மாற்ற கோரி அழகர் மனு. | சிறைச்சாலை வன்முறை | தினமலர் |
| 969. | 24.3.2010 | **விருதுநகர் மாவட்டம்:** வெங்கால்நாயக்கன்பட்டியில் அழகர்சாமி பயர் ஒர்க்ஸ் ஆலையில் வேலை பார்த்த சரவணன் (36). வெடித் திரிகள் உரசியதால் வெடி விபத்தில் உயிரிழந்தார். | பட்டாசு ஆலை விபத்து | தினமலர் |
| 970. | 24.3.2010 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி தாலுகா மாரனேரி அருகே அம்மாபட்டியில் செல்வஜோதி பயர்ஒர்க்ஸ்ல். பணிபுரிந்த கருப்பசாமி(42). சரவெடியில் மருந்து செலுத்தும் போது உராய்வு ஏற்பட்டு விபத்து. கருப்பசாமி உடல் சிதறி | பட்டாசு ஆலை விபத்து | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பலியானார். | | |
| 971. | 24.3.2010 | **சென்னை மாவட்டம்:** சென்னை ராயப்பேட்டை லாயிட்ஸ் ரோடு பகுதியைச் சோந்த மீனா. கல்லூரி சென்று திரும்பிய இவரை மா்ம நபர்கள் பாலியல் செய்ய முயற்சி. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினத்தந்தி |
| 972. | 24.3.2010 | **சென்னை மாவட்டம்:** வில்லிவாக்கத்தில் பார்வையற்ற மாணவி சூரியகலா. இசை கல்லூரியில் படிக்கும் இவர் ஆட்டோவில் சென்ற போது ஆட்டோ டிரைவர் செல்வம்(40). சூரியகலாவிடம் பாலியலுக்கு முயற்சி. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினந்தந்தி |
| 973. | 24.3.2010 | **விருதுநகர் மாவட்டம்:** காரியாபட்டி அருகே ஆவியூரைச் சேர்ந்த லிங்கம் மகள் சுமதி(18). மதுரை சொக்கிகுளத்திள் விடுதியில் தங்கி தனியார் நர்சிங் கல்லூரியில் படித்து வந்தார். சுமதியை காணவில்லை என பெற்றோர் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 974. | 24.3.2010 | **திருச்சி மாவட்டம்:** திருச்சி சமூக நலத்துறை அலுவத்தில் லஞ்ச ஒழிப்புதுறை சோதனை. இதில் திருமணம் மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கு வழங்கும் ருபாயில் லஞ்சம் வாங்கப்பட்டது உண்மை வெளியானது. மேலும் 36 பயனாளிகக்கு வழங்கப்பட வைத்திருந்த காசோலைகள் உரியவர்களிடம் வழங்கப்படவில்லை என புகார். | லஞ்சம் | தீக்கதிர் |
| 975. | 25.3.2010 | **நெல்லை மாவட்டம்:** அம்பாசமுத்திரம் வாகைகுளத்தைச் சேர்ந்த கணேசன் மனைவி சங்கரி. கணவர் மற்றும் குடும்பத்தினர் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதாக சங்கரி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 976. | 25.3.2010 | **சென்னை மாவட்டம்:** சென்னைச் மாநகராட்சி குப்பைகளை பிரிக்க பொக்லைன் இயந்திரம் பயன்படுத்தும் கான்ட்ராக்டருக்கு பொக்லைன் இயந்திரத்திற்கான பில் தொகை ஐந்து லட்சம் ரூபாய் நிலுவையில் இருந்தது. அதை வாங்க சென்ற கான்ட்ராக்டரிடம் ரூபாய் 25 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக மகாலிங்கம் மீது கான்ட்ராக்டர் புகார். | லஞ்சம் | தினமலர் |
| 977. | 25.3.2010 | **சிவகங்கை மாவட்டம்:** சிவகங்கை அருகே மேலப்பூங்குடியைச் சேர்ந்த சிட்டு. சிங்கப்பூரில் வேலை செய்த தனது கணவர் கிருஷ்ணன் ஊருக்கு வருவதாக | வெளி நாட்டில் தமிழர்கள் சித்திரவதை. | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தகவல் அனுப்பியவர் அவர் வரவில்லை. அவரது பாஸ்போர்ட் தபாலில் வந்ததாகவும் அவரை ஆஜர்படுத்த வேண்டும் என ஹேபியஸ் கார்பஸ் மனு தாக்கல். கண்டுபிடிக்கப்பட்ட கிருஷ்ணன் நீதிபதிகளிடம் கூறியதில் சிங்கப்பூரில் தனக்கு சரியாக சம்பளம் கொடுக்காமல் சித்ரவதை. இதுபோல் அந்த கம்பெனியில் 15 தமிழர்கள் சித்ரவதை. தான் மட்டும் தப்பி வந்ததாக கூறினார். | | |
| 978. | 25.3.2010 | **சென்னை மாவட்டம்:** சென்னை நகரில், சாருலதா என்பவர் தன்னை ஐ.பி.எஸ்., அதிகாரி என்று கூறி பல இளைஞர்களிடம், போலீஸ் வேலை வாங்கி தருவதாக நகை, பணம் பெற்றுள்ளதாக பணத்தை பறிகொடுத்த இளைஞர்கள் போலீசில் புகார். போலீசார் விசாரணையில் உதவி கமிஷனர் பழனிசாமிக்கு இவருடன் தெடர்பு இருப்பது தெரியவந்து. பழனிச்சாமியை சஸ்பெண்ட் செய்ய உத்தரவு. | காவல் நிலைய வன்முறை | தினமலர் |
| 979. | 25.3.2010 | **சென்னை மாவட்டம்:** பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கான பொதுத்தேர்வு வினாத்தாள்கள் தேர்வின்போது காஞ்சிபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மாநிலப்பள்ளி மாணவர்களுக்குரிய வினாத்தாள்கள் மெட்ரிக் பள்ளி மாணவர்களுக்கும், மெட்ரிக் பள்ளி மாணவர்களுக்குரிய வினாத்தாள்கள் மாநிலப்பள்ளி மாணவர்களுக்கும் வழங்கப்பட்டன. மாணவர்கள் பரிதவிப்பு. .தவறுக்குப் பொறுப்பான ஆசரியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற பள்ளிக் கல்வித் துறை தெரிவித்துள்ளது. | வகுப்பறை வன்முறை | தினமணி |
| 980. | 25.3.2010 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகே வில்லாணி கிராமத்தைச் சேர்ந்த மச்சக்காளை மகன் தவம்(26). உசிலம்பட்டி அரசு விடுதி மாணவியருக்கான சீருடைகள் மற்றும் 5 மூட்டை அரிசி பதுக்கி வைத்திருந்ததாக தவம் கைது. | விடுதி பொருட்கள் மோசடி | தினமணி |
| 981. | 25.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை ஊர்மெச்சிக்குளத்தைச் சேர்ந்த குமார் | பெண்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மனைவி சிவசங்கரி. கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணை கேட்டு துன்புறுத்தியாதால் 2 மாத கர்ப்பிணியான சிவசங்கரி தற்கொலை. | & தற்கொலை | |
| 982. | 25.3.2010 | **அரியலூர் மாவட்டம்:** ஜெயங்கொண்டம் அ.தி.மு.க.எம்.எல்.ஏ ராஜேந்திரன் சாத்தம்பாடி கிராமத்திற்கு வருவதை அறிந்து அ.தி.மு.க.வினர் கறுப்புக் கொடி காட்ட தயாராக நின்றிருந்தனர். விக்கரமங்கம் போலீசார் கறுப்புக் கொடியுடன் தயாராக நின்ற 10 அ.தி.மு.க.வினரை போலீசார் தடியடி நடத்தி விரட்டியடிப்பு. | காவல் நிலைய வன்முறை & போலீஸ் தடியடி | தமிழசுடர் |
| 983. | 25.3.2010 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரத்தைச் கேர்ந்த ராஜேந்திரன் மகள் சுபலட்சுமியை கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணை கேட்டு துன்புறுத்தியதால் சுபலட்சுமி தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 984. | 25.3.2010 | **மதுரை மாவட்டம்:** அழகுராஜா என்பவர் திருநங்கைகளை விபசாரத்துக்கு அழைப்பதாகவும், மறுப்பவர்களுக்குக் கொலை மிரட்டல் விடுத்ததாகவும் திருநங்கைகள் தல்லாகுளம் காவல்நிலையத்தில் அழகுராஜா மீது புகார். | திருநங்கைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 985. | 26.3.2010 | **சென்னை மாவட்டம்:** சென்னை பிராட்வே சி.ஆர்.என்.காலனியைச் சேர்ந்த நடராஜன்(30). காஞ்சி தாலுகா போலீஸ் இன்ஸ்பெக்டர் சம்பத், சப் இன்ஸ்பெக்டர் கோகுல்ராஜ். ஆகியோர் வாகனசோதனையில் ஈடுபட்டிருந்தனர். நடராஜன் வந்த மோட்டார் சைக்கிளை நிறுத்தும்படி சைகை காட்டினார்கள் நடராஜன் நிற்காமல் சென்றதால் ஆய்வாளர் சம்பத் சுட்டு பிடிக்க முயன்றபோது நடராஜன் மரணம். | காவல் நிலைய வன்முறை & என் கவுண்டர் | கலைஞர் தொலைக்காட்சி |
| 986. | 26.3.2010 | **தூத்துக்குடி மாவட்டம்:** தூத்துக்குடி தட்டர்மடம் போலீஸ் ஸ்டேஷனில் பணியாற்றும் இன்ஸ்பெக்டர் முருகேசன்(42). இவர் மூன்று மாதத்திற்கு முன் ஆழ்வார் திருநகரியில் பணிபுரிந்தபோது ஒரு வழக்கு விசாரணையில் முறையாக நடந்து கொள்ளவில்லை என சஸ்பெண்ட். | காவல் நிலைய வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 987. | 26.3.2010 | **தேனி மாவட்டம்:** தேனி அகமலையைச் சேர்ந்த அர்ச்சுனன் மகன் கார்த்திக்குமார்(16). முருகன் என்பவர் மத்திய பிரசேத்திற்கு வேலைக்கு அழைத்து சென்றார். அங்கு கார்த்திக்குமார் கொத்தடிமையாக நடத்ததப்படுவதாக போனில் தெரிவித்தார். இது குறித்து பெரியகுளம் தென்கரை போலீசில் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என தந்தை அர்ச்சுனன் உயர்நீதிமன்றத்தில் ஹேபியஸ் கார்பஸ் மனு தாக்கல். | கொத்தடிமை & காவல் நிலைய வன்முறை | தினமலர் |
| 988. | 26.3.2010 | **சிவகங்கை மாவட்டம்:** காரைக்குடியில் பிறந்து அரை மணிநேரம் கூட ஆகாத பச்சிளம் ஆண் குழந்தையை கால்வாயில் வீசப்பட்டது. மீட்கப்பட்ட குழந்தை அரசு மருத்துவமனையில் சிகிச்சை. | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 989. | 26.3.2010 | **திண்டுக்கல் மாவட்டம்:** என்.எஸ்.கே., நகரைச் சேர்ந்த நாகராஜ் மனைவி கற்பகவள்ளி(28). மனநிலை பாதிக்கப்பட்ட கணவர் நாகராஜ் தன்னையும் குழந்தைகளையும் கடித்து குதறுவதாகவும் அவரை மன நல காப்பகத்தில் சேர்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கற்பகவள்ளி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 990. | 26.3.2010 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி வீரபாண்டியைச் சேர்ந்த சுந்தர்ராஜ். இவரின் சொந்த இடத்தை கடைநடத்துவதற்காக ஊர் தலைவர் தம்பி கேட்டார் அதற்கு சுந்தர்ராஜ் மறுப்பு. ஆத்திரமடைந்த தம்பி சுந்தர்ராஜ் குடும்பத்தை ஊரை விட்டு ஒதுக்கி வைப்பு. போலிசில் புகார் செய்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என சுந்தர்ராஜ் மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் மனு தாக்கல். | கட்டப் பஞ்சாயத்து / சமூகப்புறக்கணிப்பு /காவல் நிலைய வன்முறை | தினகரன் |
| 991. | 26.3.2010 | **கோவை மாவட்டம்:** கோவை அருகே அன்னூரைச் சேர்ந்த ஜெயபிரகாஸ் மனைவி சுசீலா(33). இத் தம்பதியினர் குழந்தை இல்லததால் கோவை தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தனர். இவருக்கு கர்ப்பபைக்கு செல்லும் நரம்பில் அடைப்பு இருப்பதாக கூறி அறுவை சிகிச்சை செய்யும் முன் மயக்க மருந்து | மருத்துவர்களின் அலட்சியம் | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொடுக்கப்பட்ட சிறிது நேரத்தில் சுசீலா இறந்துவிட்டார். டாக்டர்கள் அஜாக்கிரதையாக செயல்பட்டதாக உறவினர்கள் புகார். | | |
| 992. | 26.3.2010 | **வேலூர் மாவட்டம்:** சாமியார் வட்டத்தைச் சேர்ந்த முருகேசன் மகன் தாமஸ் (எ) திவாகர்(18). முருகேசனுக்கும் வேறு பெண்ணுக்கும் தொடர்பு ஏற்பட்டது. இதை அறிந்த திவாகர் தந்தையின் மறு மணத்திற்கு மறுப்பு தெரிவித்ததால் ஆத்திரமடைந்த முருகேசன் தூங்கி கொண்டிருந்த திவாகரின் கழுத்தை அறுத்துக் கொன்றதாக முருகேசன் கைது. | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 993. | 26.3.2010 | **கடலூர் மாவட்டம்:** விருத்தாசலத்தைச் அடுத்த கார்குடல் கிராமத்தைச் சேர்ந்த அஸ்பத்ராமன் மகன் கலைவாணன்(31). இவருக்கும் செந்துரையை அடுத்த மத்துமடக்கி கிராமத்தைச் சேர்ந்த செல்விக்கும் திருமணம் நிச்சயம் செய்தனர். திருமணம் நாள் அன்று மணமேடைக்கு அழைத்து செல்லும் நேரத்தில் மணமகன் மாயம். மணமகள் வீட்டார் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 994. | 26.3.2010 | **திண்டுக்கல் மாவட்டம்:** சாணார்பட்டி ஒன்றியத்தில் உள்ள கம்பிளியம்பட்டி ஊராட்சியின் தலைவராக இருப்பவர் வீராச்சாமி. இவர் தேசீய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்படி சம்பளம் வழ்காமல் குளத்து வேலைக்கான கூலியை குறைத்து தருவதாக ஊராட்சித் தலைவரைக் கண்டித்து விவசாயத் தொழிலாளர்கள் 500 பேர் சாலை மறியல். | லஞ்சம் | திக்கதிர் |
| 995. | 26.3.2010 | **இராமநாதபுரம் மாவட்டம்:** இராமேசுவரத்தில் இருந்து மீன் பிடிக்க மீனவர்கள் சென்றனர். நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது சிங்கள கடற்படையினர் மீனவர்களை தாக்கி அவர்களிடம் இருந்த இறால் மீன்களையும் செல்போன்களையும் மீன் வளத்தை அறியும் சி.பி.எஸ். என்ற கருவியையும் பறித்துச் சென்றதாக மீனவர்கள் புகார். | மீனவர்கள் மீதான வன்முறை | தமிடிழ்சுடர் |
| 996. | 26.3.2010 | **விழுப்புரம் மாவட்டம்:** விழுப்புரம் நகரில் உள்ள பத்திரப்பதிவு | லஞ்சம் | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அலுவலகத்தில் வருமானவரித்துறை அதிகாரிகள் அதிரடி சோதனையில் பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஆவணங்கள் மற்றும் பணம் சிக்கியதாக அதிகாரிகள் தகவல். | | |
| 997. | 26.3.2010 | **சென்னை மாவட்டம்:** சென்னை, குமரன்நகர், ஜாபர்கான்பேட்டை, வால்மீகி நகரில் வசிப்பவர் புருஷோத்தமன் மனைவி கஜலட்சுமி(23) குழந்தை கவுசல்யா(2). கஜலட்சுமியிடம் கருத்து வேறுபாடு ஏற்பட்டு புருஷோத்தமன் பிரிந்துவிட்டதால். மனமுடைந்த கஜலட்சுமி குழந்தையுடன் தீக்குளித்துத் தற்கொலை | பெண்கள் மீதான வன்முறை & வறுமை தற்கொலை | தமிழ்சுடர் |
| 998. | 27.3.2010 | **கோவை மாவட்டம்:** கோவை அருகே நரசிம்மநாயக்கன் பாளையம் அங்கண்ணன் வீதியைச் சேர்ந்த கணேசன்(31) மனைவி கங்கா(28). கங்காவின் நடத்தையில் சந்தேகப்பட்டு கங்கா மீது மண்ணெண்ணையை ஊற்றி தீ வைத்ததாக கணேசன் மீது புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை முயற்சி | தமிழ்சுடர் |
| 999. | 27.3.2010 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் தாலுகா வில்லாங்குளம் கிராமத்தில் வசிப்பவர் மாரியப்பன்(23) மனைவி ரமா(20). தனியார் மருத்துவமனையில் பிரசவத்திற்காக அனுமதிக்கபட்டு ஆண் குழந்தை பிறந்தது. அங்கு ஒரு மர்ம பெண் டாக்டர் போல் நடித்து குழந்தையை தூக்கி சென்றதாக மாரியப்பன் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை & கடத்தல் | தமிழ்சுடர் |
| 1000. | 27.3.2010 | **சென்னை மாவட்டம்:** போலியான சத்து மாத்திரைகளை தயாரித்து 700 கடைகளுக்கு சப்ளை செய்ததாக 5 முக்கிய ஏஜெண்டுகள் கைது. மோசடி கும்பலின் தலைவன் மீனாட்சி சுந்தரம் மீது வழக்கு பதிவு. | காலாவதியான மருந்துகள் விற்று மக்களை கொல்ல முயற்சி | தினகரன் |
| 1001. | 27.3.2010 | **கரூர் மாவட்டம்:** லாலாப்பேட்டை அடுத்துள்ளது மாயனனூர் துணை மின் நிலையத்தின் வருவாய் ஆய்வாளர் பெரியசாமி(38). ஜெயங்கொண்டம் அருகே லட்சுமணப்பட்டியைச் சேர்ந்த விவசாயி ராமசாமி. ராமசாமி தனது விவசாய நிலத்திற்கு மின் இணைப்பு வழங்க கோரி பெரியசாமியை அணுகினார். அவர் ரூபாய் 1000 லஞ்சம் கேட்டதாக ராமசாமி, பெரியசாமி மீது | லஞ்சம் | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | புகார். | | |
| 1002. | 27.3.2010 | **ஈரோடு மாவட்டம்:** ஈரோடு காமராஜ் வீதியைச் சேர்ந்த சந்திரசேகரன் மனைவி உமாமகேஸ்வரி. கணவனிடம் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் இருவரும் பிரிந்து வாழ்ந்து வந்தனர். உமாமகேஸ்வரியைத் தாக்கிவிட்டு தனது மகன் விக்கேனஸ்வரன்(13) கணவன் சந்திரசேகர் கடத்தி சென்றதாக உமாமகேஸ்வரி புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினமலர் |
| 1003. | 27.3.2010 | **நெல்லை மாவட்டம்:** நெல்லை அருகே திசையன்விளையைச் சேர்ந்த இளம்பெண்ணை அதே பகுதியைச் சேர்ந்த கார்திதீசன், சித்திரைப்பாண்டி, ராஜலிங்கம் ஆகியோர் அழைத்துச் சென்று பாலியல் சித்திரவதை. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 1004. | 27.3.2010 | **சேலம் மாவட்டம்:** மேட்டூர் நாட்டாமங்கலம் கிராமத்தில் தனியார் பள்ளியில் பயிலும் 3 வகுப்பு மாணவி ஹர்சவர்தினி. கணித ஆசிரியர் சந்தோஷ் ஹர்சவர்த்தினியை அடித்துச் சித்திரவதை. படுகாயம் அடைந்த மாணவி மருத்துவ மனையில் சிகிச்சை. | வகுப்பறை வன்முறை | கலைஞர் TV |
| 1005. | 27.3.2010 | **விருதுநகர் மாவட்டம்:** சாத்தூர் தாலுகா, இருக்கன்குடி குமரவேல் மனைவி செல்வராணி. கணவர் அடித்துச் சித்திரவதை செய்வதாக செல்வராணி புகார். | பெண்கள் மீதான வன்முறை | முனியராஜ் தினகரன் |
| 1006. | 27.3.2010 | **விருதுநகர் மாவட்டம்:** மாணவர் சர்ச்சில். ஊட்டியில் உள்ள கேத்திபள்ளியில் 7–ம் வகுப்பு படித்து வரும் சர்ச்சிலை பள்ளி முதல்வர் வயிற்றில் எட்டி உதைத்ததில் படுகாயம். மாணவனிடம் கட்டாயமாக பள்ளி மாற்றுச் சான்றிதழ் கொடுத்து பள்ளியை விட்டு நீக்கம். சர்ச்சில் தந்தை விருதுநகர் கிழக்கு காவல் நிலையத்தில் புகார். | வகுப்பறை வன்முறை | Hindu |
| 1007. | 28.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை அருகே சக்கிமங்லத்தைச் சேர்ந்த சந்திரன் மனைவி வெள்ளையம்மாள். இவர் தனது கணவர் சந்திரன், முருகேசன், கணேசன் ஆகியோர் மீது விருதுநகர் போலீசார் பொய் வழக்கு பேட்டு தன்னிடம் ரூ.60 ஆயிரம் பறிக்க முயன்றனர். என உயர் நீதிமன்றத்தில் மனு. | காவல் நிலைய வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| 1008. | 28.3.2010 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையத்தில் இருந்து அனாதை ஆசிரமத்தில் உள்ள குழந்தைகளை 5 பஸ்கள் மூலம் கொடைக்கானலுக்கு சுற்றுலா அழைத்துச் சென்றனர். அங்குசஞ்சய் என்ற சிறுவனை கடத்த முயன்றதாக ஆயிஷா கைது. | குழந்தைகள் மீதான வன்முறை & கடத்தல் முயற்சி | தினத்தந்தி |
| 1009. | 28.3.2010 | **சேலம் மாவட்டம்:** மேச்சரி பஸ் நிலையத்தில் தி.மு.கா, பா.ம.க, மற்றும் தே.மு.தி.க.வினர் பென்னாகரம் தேர்தல் பணிக்கு வெளியூரில் இருந்து வந்து இங்கு தங்கி இருப்பவர்களை அகற்ற வேண்டும் என்று ஆர்ப்பாட்டம். இதில் தி.மு.க, பா.ம.க. இருவருக்கும் மோதல். போலீஸ் தடியடி. | காவல் நிலைய வன்முறை & தடியடி | தினத்தந்தி |
| 1010. | 28.3.2010 | **நாகை மாவட்டம்:** மயிலாடுதுறை கீழையூரைச் சேர்ந்த ஹென்றி. இவர் செம்பனார்கோயில் அருகே குழந்தைகள் காப்பகம் நடத்தி வந்தார். அனுமதியின்றி காப்பகத்தை நடத்தியாதாக அங்கிருந்த 23 குழந்தைகளை அதிகாரிகள் மீட்பு. | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 1011. | 28.3.2010 | **மதுரை மாவட்டம்:** ஆனையூர் இமயம் நகர் பகுதியைச் சேர்ந்த வில்லியம்பெட் மனைவி பனிமேரி(30). கணவன் மனைவி தகராறில் மனமுடைந்த பனிமேரி தீக்குளித்து தற்கொலை. | பெண் கள் மீதான வன்முறை & தற்கொலை | தினமணி |
| 1012. | 28.3.2010 | **நெல்லை மாவட்டம்:** தென்காசியை அடுத்துள்ள கடையநல்லூர் கிருஷ்ணாபுரத்தைச் சேர்ந்த முருகன் மகள் பூமாரி(16). சாரியாக படிக்காததால் பெற்றோர் கண்டிப்பு. மனமுடைந்த பூமாரி தீக்குளித்துத் தற்கொலை. | குழந்தைகள் மீதான வன்முறை & தற்கொலை | தமிழ்சுடர் |
| 1013. | 28.3.2010 | **மதுரை மாவட்டம்:** கீழமாத்தூர் பகுதியைச் சேர்ந்த ஏட்டு மகள் சங்கீதா. சங்கீதாவை சமையநல்லூரைச் சேர்ந்த செல்வம் என்பவர் கடத்திச் சென்றுள்ளதாக ஏட்டு புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தமிழ்சுடர் |
| 1014. | 29.3.2010 | **திருப்பூர் மாவட்டம்:** நெருப்பெரிச்சல் வி.ஏ.ஓ., இருந்த கிருஷ்ணமூர்த்தி கஞ்சம்பாயைத்தைச் சேர்ந்த விவசாயி பாப்பண்ணனிடம் பட்டா மாறுதலுக்காக ஒரு லட்சத்து 30 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக பாப்பண்ணன் புகார். | லஞ்சம் | தினமலர் |
| 1015. | 29.3.2010 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமேஸ்வரம் பகுதியிலிருந்து 670 | மீனவர்கள் மீதான வன்முறை | ஜனசக்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | படகுகளில் மீனவர்கள் மீன் பிடிக்க சென்றனர். கச்சத்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் மீனவர்களைச் சுற்றி வளைத்து தாக்குத் நடத்தி பொருட்களை சேதப்படுத்தியதாக மீனவர்கள் புகார். | | |
| 1016. | 29.3.2010 | **மதுரை மாவட்டம்:** தாசில்தார் நகரைச் சேர்ந்த முகமது வாசிம் மனைவி தூவீகா பேகம்(31) கணவர் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதாக தூவீகா பேகம் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1017. | 29.3.2010 | **மதுரை மாவட்டம்:** தெற்குவாசலைச் சேர்ந்த மாதவன்மனைவி மகாலட்சுமி(22). மாமியார் காஞ்சனா கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதால் மனமுடைந்த மகாலட்சுமி தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 1018. | 29.3.2010 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் உசிலம்பட்டி ரோட்டைச் சேர்ந்த சுரேஷ் மனைவி பசுபதி(35).கணவன் மனைவி இடையே ஏற்பட்ட குடும்ப தகராறில் மனமுடைந்த சுரேஷ் தீக்குளிப்பு. மனமுடைந்த பசுபதி தூக்குப்போட்டு தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 1019. | 29.3.2010 | **திருப்பூர் மாவட்டம்:** திருப்பூர் அவிநாசி ரோட்டில் பாசி போரெக்ஸ் நிதி நிறுவன இயக்குனர்களில் ஒருவரான கமலவள்ளி. போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் சண்முகய்யா, மோகன்ராஜ் இருவரும் கமலவள்ளியை கடத்தி சென்ற 3 நாட்கள் அடைத்து வைத்து பாலியல் சித்திரவதை, மற்றும் பல கோடி ருபாயை போலீஸ் அதிகாரிகள் பறித்துக் கொண்டதாக கமலவள்ளி நீதிமன்றத்தில் வாக்குமூலம். போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் சஸ்பெண்ட். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை & காவல் நிலைய வன்முறை | தினகரன் |
| 1020. | 30.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை தல்லாகுளம் பகுதியைச் சேர்ந்த ரவீந்திரன் மனைவி பரமேஸ்வரி இவர் புதூர் காவல் நிலையத்தில் எஸ்ஐ. யாக உள்ளார். இவரது மகள் ஷோபனா ஜெனிபர்(19). தனது குடும்பத்தினர் வயதான ஒருவருக்கு தன்னை கட்டாய திருமணம் செய்து வைக்க முயற்சி செய்வதாக தனது தந்தை, தாய் மீது | பெண்கள் மீதான வன்முறை & கட்டாயத் திருமணம் & காவல் நிலைய வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஷேபனா ஜெனிபர் புகார். | | |
| 1021. | 30.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை மேலமடையில் உள்ள ரேசன் கடையில் இருந்து ரேசன்அரிசி கடத்த முயன்ற முத்துச்சாமி(50) முத்துப்பாண்டி(29), பிரபு(25) ஆகியோர் கைது | ரேசன் அரிசி கடத்தல் | தினத்தந்தி |
| 1022. | 30.3.2010 | **மதுரை மாவட்டம்:** வாடிப்பட்டி பகுதியில் சில நாட்களாக குடிநீர் வினியோகம் செய்யவில்லை. இதனைக் கண்டித்து காலிக்குடங்களுடன் வாடிப்பட்டி யூனின் அலுவலம் அருகே பொதுமக்கள் ஊர்வலம் சென்றபோது பஞ்சாயத்து தலைவரின் ஆதரவாளர்கள் ஊர்வலமாக சென்ற பொதுமக்கள் மீது தாக்குதல். பொதுமக்கள் சாலை மறியல். | பஞ்சாயத்து தலைவரின் தகாத நடவடிக்கை | தினமலர் |
| 1023. | 30.3.2010 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** அஞ்செட்டி அருகில் உள்ள சவுளுபெயில் கிராமத்தில் வசிப்பவர் பெரியசாமி மனைவி மோகனப்பிரியா. கூடுதல் வரதட்சணை கேட்டு கணவர் அடித்ததோடு உணவு கூட வழகங்காமல் மூன்று நாட்கள் அடைத்து வைத்துச் சித்திரவதை. பால் குடிக்கும் குழந்தையை தாயிடம் இருந்து பிரித்து கொடுமை செய்ததாக கணவன் மீது புகார் கொடுத்தும் காவல்துறை நடவடிக்கை எடுக்கவில்லை என மோகனப்பிரியா புகார். | பெண்கள் மீதான வன்முறை<br>&<br>காவல் நிலைய வன்முறை | தீக்கதிர் |
| 1024. | 30.3.2010 | **சென்னை மாவட்டம்:** சென்னை புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதி வியாசர்பாடியைச் சேர்ந்த முருகனுக்கும் பிச்சைக்கும் ஏற்பட்ட மோதலில் பிச்சை படுகாயத்துடன் மருத்துவமனையில் சிகிச்சை. பிச்சையை காயபடுத்திய முருகனை வேறு பிளாக்குக்கு மாற்றியதற்கு எதிர்ப்பு தெரிவித்து மற்ற கைதிகள் உண்ணாவிரதம். | சிறைச்சாலை வன்முறை | தீக்கதிர் |
| 1025. | 30.3.2010 | **தேனி மாவட்டம்:** ஆண்டிபட்டி போடி தாசன்பட்டி பஞ்சாயத்து மணியகாரன்பட்டி ஆதிதிராவிட மக்களுக்கு ஆதிதிராவிட நலத்துறை 109 குடும்பங்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கியது. அந்த இடத்தை அளந்து கல்ஊன்றித் தர ஆதிதிராவிட நல தனி | தலித்துகள் மீதான வன்முறை | ஜனசக்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வட்டாட்சியரிடம் பல முறை மனு கொடுத்தும் மறுப்பதாக ஆதிதிராவிட மக்கள் புகார். | | |
| 1026. | 31.3.2010 | **கோவை மாவட்டம்:** பொள்ளாச்சி தாலுகா, வேட்டைக்காரன் புதூரைச் சேர்ந்த மூர்த்தி என்பவரை ஆனைமலை காவல் நிலைய காவலர்கள் இரவு 8 மணிக்கு அழைத்துச் சென்று அடித்து சித்திரவதைச் செய்து சட்டவிரோதக் காவலில் வைத்துள்ள சம்பவம். | காவல் நிலைய வன்முறை | பழனியம்மாள் |
| 1027. | 31.3.2010 | **வேலூர் மாவட்டம்:** திருப்பத்தூர் தாலுகா மேல் அச்சமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த ஏழை விதவை ஜெயா. இவருக்கு சொந்தமான விவசாய நிலத்தை ஊர்க்காரங்க சிலர் விலைக்கு கேட்டு ஜெயா தர மறுத்ததால் எதிரிகள் மிரட்டினார்கள். இது குறித்து காவல்துறையில் புகார் கொடுத்தும் ஜோலார்பேட்டை போலீஸ் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர், எஸ்.ஐ., ஏட்டு உள்ளிட்டவர்கள், எதிரிகளோடு சேர்ந்து தன்னை ஸ்டேஷக்கு அழைத்துச் சென்று மிரட்டி வெள்ளை பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள், என் மீது விபசார வழக்கு போடுவதாக காவலர்கள் மிரட்டுவதாக ஜெயா உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல். உயர்நீதிமன்றம் உத்தரவின்படி காவல்துறையினர் மூவர் உள்பட 18 பேர் மீது வழக்கப்பதிவு செய்தும் கூட போலீஸின் அராஜகம் குறைவில்லை என ஜெயா புகார். | பெண்கள் மீதான வன்முறை<br>&<br>காவல் நிலைய வன்முறை | ஜூனியர் விகடன் |
| 1028. | 31.3.2010 | **மதுரை மாவட்டம்:** கீரிப்பட்டி பகுதியில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அப்பகுதியில் தண்ணீர் குழாயை அடைத்து வைத்துள்ளனர். பொதுப்பாதையில் நடக்க விடாமல் தடுப்போரை கைது செய்ய வேண்டும் என கோரிக்கைகளை வலியுறுத்தி அப்பகுதி மக்கள் திடீர் சாலை மறியல். | தலித்துகள் மிதான வன்முறை | தினமலர் |
| 1029. | 31.3.2010 | **மதுரை மாவட்டம்:** சோழவந்தான் சுடுகாடு பாதை, கச்சிராயிருப்புப் பிரிவு வைகை ஆற்றுப் பகுதியில் அனுமதியின்றி மணல் திருடிய 10 மாட்டுவண்டிகள் பறிமுதல். | மணல் கொள்ளை | தினமலர் |
| 1030. | 31.3.2010 | **மதுரை மாவட்டம்:** பாலமேடு நாடார் | கோஷ்டி மோதல் | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உறவின் முறைக்கு பாத்தியப்பட்ட மாரியம்மன் கோயில் திருவிழா. இதில் முளைப்பாரி நிகழ்ச்சியில் முளைப்பாரி துாக்கிச் சென்றவர்களை சிறுவர்கள் கேலி செய்தனர். விழாக்குழுனர் இளைஞர்கள் கேலி செய்த சிறுவர்களை அடித்தனர். ஆத்திரமடைந்த சிறுவர்களின் பெற்றோர்கள் வீழாக்குழுவை சேர்ந்தவர்களின் வீடு புகுந்து தாக்கினர். இந்த மோதலில் இருதரப்பிலும் 20 பேர் படுகாயமடைந்தனர். | | |
| 1031. | 31.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை ஜெய்ஹிந்துபுரம் பாரதியார் ரோட்டில் சிப்பவர் சந்தியாகு மகன் வேதமாணிக்கம் (25). இவரிடம் எம்.கே.புரத்தைச் சேர்ந்த முத்துகிருஷ்ணன் ரூ.1லட்சம் கடன் வாங்கினார். வேதமாணிக்கம் கடனை திருப்பி கேட்டதால் ஆத்திரமடைந்த முத்துகிருஷ்ணன் அடியாட்கள் மூலம் வேதமாணிக்கத்தை அரிவாளல் வெட்டியதாக புகார் கொடுத்தும் காவல்துறை நடவடிக்கை எடுக்கவில்லை என உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கை விசாரிக்க நீதிபதி உத்தரவிட்டு 6 மாதங்கள் ஆகியும் ஜெய்ஹிந்தபுரம் போலீசார் கொலை முயற்சி வழக்கு பதிவு செய்யவில்லை என வேதமாணிக்கம் புகார். | காவல் நிலைய வன்முறை | தமிழ்சுடர் |
| 1032. | 31.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை கோமதிபுரத்தைச் சேர்ந்த மனவளர்ச்சி குன்றிய (23) வயது பெண்ணை வண்டியூரைச் சேர்ந்த ரவிச்சந்திரன் பாலியல் பலாத்காரம். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தமிழ்சுடர் |
| 1033. | 31.3.2010 | **திருச்சி மாவட்டம்:** மணப்பாறை தாலுகா மருங்காபுரி ஒன்றியம் மினிக்கியூரில் தலித் மக்கள் புழக்கத்தில் உள்ள இடத்தில் பஞ்சாயத்து சார்பில் நூலகம் அமைக்கும் பணி தொடங்க முயற்சி. தலித் மக்கள் எதிர்ப்பு. இதற்கு எதிர்ப்பு தெரிவித்த தலித் மக்களின் குடிசைகளை சில ரவுடிகள் எரித்ததாக தலித் மக்கள் புகார். காவல் ஆய்வாளர் மாணிக்கம் நடவடிக்ககை எடுக்கவில்லை என தலித் மக்கள் புகார். | தலீத்துகள் மீதான வன்முறை & காவல் நிலைய வன்முறை | ஜனசக்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| 1034. | 31.3.2010 | **நெல்லை மாவட்டம்:** பாளையங்கோட்டை சிறையில் கைதிகள் மோதல். கீழஆம்பூரைச் சேர்ந்த சரவணன் குண்டர் சட்டத்தில் கைது. இவருக்கும் சிறையில் உள்ள குமார் என்ற ஆயுள் கைதிக்கும் இடையே மோதல். ஒருவரை ஒருவர் தாக்கியதாக புகார். | சிறைச்சாலை வன்முறை | தினத்தந்தி |